DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Fast Track Magistrate, Srivilliputtur.

STC.No. 1190–2023

Deposition of Witness for D.W. 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | கஸ்தூரி | **தாலுகா** | : | விருதுநகர் |
| **த.பெ.** | : | பாலசுப்ரமணியம் | **தொழில்** | : | |
| **ஊர்** | : | விருதுநகர் | **வயது** | : | 59 |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 17.02.2026.

புகார்தாரர் ஆஜர்.எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் விருதுநகரில் குடியிருக்கிறேன். நான் விருதுநகர் சார்பு நீதிமன்றத்தில் சிரேஸ்தாராக வேலை பார்க்கிறேன். எதிரி பாரதி என் அக்கா ராமலட்சுமியின் மருமகன் ஆவார். என் அக்கா ராமலட்சுமி 2023ம் ஆண்டு முதல் பக்கவாத நோயால் படுத்த படுக்கையாக உள்ளார். புகார்தாரர் வீட்டில் என் அக்கா ராமலட்சுமி வாடகைக்கு குடியிருந்தார் அதன் மூலமாக எனக்கு புகார்தாரரை தெரியும். நானும் புகார்தாரரும் பிள்ளைமார் சமூகத்தை சார்ந்தவர்கள். புகார்தாரர் எனக்கு எதிராக திருவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் புரோநோட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தார். நான் அந்த வழக்கில் எதிருரை தாக்கல் செய்திருந்தேன். நான் அந்த எதிருரையை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அசல் வழக்கு எண்.243/2024 வழக்கில் நான் 25.09.2024 தேதியிட்டு தாக்கல் செய்த எதிருரையின் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். அது **எ.சா.ஆ.9** ஆகும். 2017ம் ஆண்டு என் அக்கா வாங்கிய கடனிற்கு அரசு ஊழியர் செக்யூரிட்டி தரவேண்டும் என புகார்தாரர் கேட்டதால் நான் புரோநோட்டு கொடுத்தேன்.

என் அக்கா ரூ.5 லட்சம் கடன் வாங்கியிருந்தார். கடனுறுதி சீட்டில் நிரப்பப்படாமல் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்திருந்தேன். புகார்தாரர் அவ்வாறு கேட்டதால் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன். என்னுடன் இந்த வழக்கின் எதிரி ஒரு காசோலையும் ஒரு புரோநோட்டும் கொடுத்தார். எதிரியின் வெற்று காசோலை மற்றும் வெற்று புரோநோட்டில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தார். எதிரி மற்றும் எதிரியின் மனைவி பல்வேறு காலகட்டங்களில் செலுத்திய தொகைக்கும் என் அக்கா வாங்கிய கடனின் அசல் மற்றும் வட்டிக்கு செலுத்தப்பட்டதாகும். என் அக்கா வாங்கிய மேற்படி கடனை ஏப்ரல் மாதம் 2021ம் ஆண்டு நான் புகார்தாரர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர் மகள் சுபஸ்ரீ கணக்கில் ரூ.5 லட்சத்தை காசோலை மூலமாக செலுத்தி என் அக்காவின் மேற்படி கடனை அடைத்தேன்.

CK-10037-4022

நான் அந்த ரூ.5 லட்சம் காசோலை கொடுத்தபோதே நான் கொடுத்திருந்த புரோநோட்டை திரும்ப கேட்டேன். அதனை அவர் எங்கோ வைத்திருப்பதாகவும், அதனை தேடி தருவதாகவும் சொன்னார். அவர் பெயரில் உள்ள நம்பிக்கையில் நான் வந்துவிட்டேன். நானும் இந்த வழக்கின் எதிரியும் புகார்தாரரிடம் எந்த கடனும் வாங்கவில்லை. என் அக்கா மேற்படி வாங்கிய கடன்தான். நானோ எதிரியோ புகார்தாரருக்கு எந்த பணமும் செலுத்த வேண்டியது இல்லை. எ.சா.ஆ.8 வங்கி கணக்கு பட்டியல் என்னுடைய வங்கி கணக்கு பட்டியல் ஆகும். எ.சா.ஆ.8 வங்கி கணக்கு பட்டியலில் நான் புகார்தாரரின் மகளுக்கு கடந்த 17.04.2021 அன்று ரூ.5 லட்சம் செலுத்தியது குறித்து பதிவு உள்ளது.

**குறுக்கு விசாரணை :**

புகார்தாரரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

(X KASTHURI)

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

17/12/21

நீதித்துறை விரைவு நடுவர்
திருவில்லிபுத்தூர்.